இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 296 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 23 – வெள்ளிக்கிழமை 06 ஜூன் 2025 – சென்னை 16+8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 296 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 23 - Friday 06 June 2025 - Chennai 16+8 Pages ₹ 5.00

## நெகிழி மாசுபாட்டை ஒழித்திட உறுதியேற்போம்! நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு

# சமூக நீதிக்கான அரசு மட்டுமல்ல; சூழலியல் நீதிக்கான அரசு!

## உலக சுற்றுச் சூழல் தின விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூன் 6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.6.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில் உரையாற்றுகையில், “நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு சமூக நீதிக்கான அரசு மட்டுமல்ல; சூழலியல் நீதிக்கான அரசாகவும் விளங்குகிறது” என்று குறிப்பிட்டார்.**

**இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இன்று, உலக சுற்றுச்சூழல் நாள், மட்டுமல்ல, நாம் வாழும் பூமி கடும் நெருக்கடியில் இருக்கிறது என்கின்ற கடினமான உண்மையை உணர வேண்டிய நாளும் கூட! நம்முடைய குழந்தைகளின் எதிர்காலம், இப்போது நாம் செய்யும் செயல்களைப் பொறுத்துதான் அமையும் என்ற அந்த நினைவூட்டலோடு என்னுடைய உரையைத் தொடங்குவது பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

### காடுகளே, புவி மூச்சுவிட உதவும் நுரையீரல்!

காடுகள் என்றால் வரைபடத்தில் தெரிகின்றது போல பச்சைத் திட்டுகள் என்று சாதாரணமாக யாரும் நினைத்துவிடக் கூடாது. காடுதான் இந்த புவி மூச்சுவிட உதவுகின்ற நுரையீரல். அந்தக் காடுகளைப் பாதுகாப்பதற்கான மனிதவளத்தின் அவசரத் தேவையை உணர்ந்து, பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த காலிப் பணியிடங்களை நிரப்பிய நம்முடைய வனத்துறை அமைச்சருக்கும், செயலாளர் உள்ளிட்ட வனத்துறை மூத்த அதிகாரிகளுக்கும் முதலில் என்னுடைய நன்றியை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வனக்காவலர்கள் நியமன ஆணைகளை இன்று வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள்தான் நம்முடைய காடுகளின் முதுகெலும்பு. எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், நம்முடைய சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் ஹீரோக்கள் நீங்கள்தான்! இந்தத் துறையின் அமைச்சர்களான ராஜகண்ணப்பன் அவர்களும், தங்கம் தென்னரசு அவர்களும், துறைச் செயலாளரான திருமதி சுப்ரியா சாகு ஐ.ஏ.எஸ். அவர்களும் இதை Just ஏதோ பொறுப்பாகப் பார்க்காமல், தனிப்பட்ட முறையில் ஆர்வத்தோடும் அக்கறையோடும் செயல்பட்டு நம்முடைய அரசுக்குப் பெருமை சேர்க்கிறார்கள். அதற்காக, என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின விழாவில், தமிழ்நாடு கடல்சார் மேம்பாட்டு திட்டத்தின் மூலமாக 175 கோடி ரூபாய் செலவில் 14 கடலோர மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட மீன்பிடி வலைகள் சேகரிப்பு மையங்களை திறந்து வைத்து, தனுஷ்கோடியில் பெரும் பூநாரை பறவைகள் சரணாலயம் அறிவிக்கை பற்றிய குறும்படத்தையும் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, தா.மோ. அன்பரசன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அரசு அதிகாரிகள் திருமதி சுப்ரியா சாஹு, ஆக. ராகுல் நாத், ஸ்ரீனிவாஸ் ரெட்டி, ராகேஷ் குமார் டோக்ரா, முனைவர் எம். ஜெயந்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### சுற்றுச்சூழல் ஆளுகைக் கட்டமைப்புக்கு நான்கு முதன்மை இயக்கங்கள்!

இந்தியாவிலேயே சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக வேறு எந்த மாநிலத்திலும் “இத்தனை இயக்கங்கள், திட்டங்கள் இல்லை” என்று நான் அடித்துச் சொல்கிறேன்! அந்த அளவுக்கு கடந்த 4 ஆண்டுகளில் தொலைநோக்கோடு பல முன்னெடுப்புகளைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். ‘தமிழ்நாடு க்ரீன் கிளைமேட்’ கம்பெனி என்கின்ற, இந்தியாவின் மிகச்சிறந்த ஒருங்கிணைந்த காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் ஆளுகைக் கட்டமைப்பை உருவாக்கினோம். அதன் கீழ், நான்கு முதன்மை இயக்கங்களை அமைத்திருக்கிறோம்.

முதலாவதாக, ‘தமிழ்நாடு பசுமை இயக்கம்’ மூலமாக, 10 கோடிக்கும் அதிகமான மரக்கன்றுகளை நட்டிருக்கிறோம். வனப்பரப்பை அதிகரித்திருக்கிறோம்.

இரண்டாவதாக, ‘தமிழ்நாடு ஈரநில இயக்கம்’ தொடங்கி, இந்தியாவிலேயே அதிகபட்சமாக ராம்சார் அங்கீகாரம் பெற்ற 21 ஈர நிலங்கள் கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்று சாதனை படைத்திருக்கிறோம்.

மூன்றாவதாக, ‘தமிழ்நாடு காலநிலை மாற்றத் திட்டம்’ மூலமாக Carbon Emissionனை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட முக்கியமான பணிகளைச் செய்து கொண்டு வருகிறோம்.

நான்காவதாக, ‘தமிழ்நாடு நெய்தல் மீட்சித் திட்டம்’ மூலமாக, உலக வங்கியுடன் இணைந்து 1,675 கோடி ரூபாய் மதிப்பீட்டில், முக்கிய கடலோரப் பகுதிகளின் தாங்குதிறனை வலுப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

இதுமட்டுமல்ல, கடந்த 4 ஆண்டுகளில், 7,000 ஹெக்டேருக்கும் அதிகமான 65 புதிய வனக் காப்பகங்களுக்கு அறிவிக்கை செய்து, சட்டப்பூர்வப் பாதுகாப்பு அளித்திருக்கிறோம்.

## காலநிலை நடவடிக்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்! சுற்றுச்சூழலைப் பாதுகாக்க எண்ணற்ற திட்டங்கள்!

அகத்தியமலை யானைகள் காப்பகம், தெற்கு காவிரி வனவிலங்கு காப்பகம், தந்தை பெரியார் வன உயிரினக் காப்பகம், கடவூரில், இந்தியாவின் முதல் தேவாங்கு சரணாலயம், நஞ்சராயன் பறவைகள் காப்பகம், கழுவேலி பறவைகள் காப்பகம் மற்றும் இந்தியாவின் முதல் “கடற்பசு காப்பகம்” ஆகிய 7 வன உயிரின சரணாலயங்கள் பாதுகாக்கப்பட்ட பகுதி வலையமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது நான் சொல்லியிருக்கும் அனைத்தும் ஒவ்வொரு வகையில் ஒரு ரெக்கார்டு!

### சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு ‘நீல கார்பன்’ மூலம் புத்துயிர்!

2 ஆயிரத்து 403 ஹெக்டேர் பரப்பளவில், புதிய அலையாத்தி காடுகளை உருவாக்கி இருக்கிறோம். 1,207 ஹெக்டேர் தரங்குன்றிய சதுப்புநிலக் காடுகளை மீட்டெடுத்திருக்கிறோம். முக்கியமான “நீல கார்பன்” சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு புத்துயிர் வழங்கியிருக்கிறோம். இந்த வரிசையில், மன்னார் வளைகுடாவில் இருக்கும் தனுஷ்கோடியில், தமிழ்நாட்டின் முதல் கிரேட்டர் ஃபிளமிங்கோ சரணாலயம் குறித்த அரசு அறிவிப்பை வெளியிடுவதில் நான் பெருமையடைகிறேன்.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

---

### ரூ.1,538.35 கோடியில் 3 பெட்டிகள் கொண்ட

# ஓட்டுநர் இல்லாத 32 மெட்ரோ ரயில்களை தயாரிக்க ஒப்பந்தம்!

### ஆல்ஸ்டோம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது!

*சென்னை, ஜூன் 6-*

*மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட திட்டத்தில் ஓட்டுநர் இல்லாமல் இயக்கப்படும் மெட்ரோ இரயில்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் ரூ.1,538.35 கோடி மதிப்பில் வழங்கப்பட்டது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், இரண்டாம் கட்ட திட்டத்தில் ஓட்டுநர் இல்லாமல் இயக்கப்படும் 3 இரயில் பெட்டிகளை கொண்ட 32 மெட்ரோ இரயில்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் Alstom Transport India நிறுவனத்திற்கு ரூ.1,538.35 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பு கடிதம் (LOA) 28.04.2025 அன்று Alstom Transport India நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.*

*சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக இயக்குநர் மனோஜ் கோயல் (அமைப்புகள் மற்றும் இயக்கம்) மற்றும் Alstom Transport India நிறுவனத்தின் இயக்குநர் பராக் நந்தலால் கோஹெல் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் ஏ. ஆர்.ராஜேந்திரன், (மெட்ரோ இரயில், சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு), இணை பொது மேலாளர் பி.தியாகராஜன் (மெட்ரோ இரயில்), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பொது ஆலோசகர் AEON மற்றும் Alstom Transport India நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.*

*இந்த ஒப்பந்தத்தில், வடிவமைப்பு, உற்பத்தி, வழங்கல், சோதனை, ஆணையிடுதல், பணியாளர்களுக்கான பயிற்சி, மெட்ரோ இரயில் மற்றும் பணிமனை இயந்திரங்களுக்கு 15 ஆண்டுகள் முழுமையான பராமரிப்பு உள்ளிட்ட ஓட்டுனர் இல்லாத மெட்ரோ இரயில்களை வழங்குதல் போன்றவை உள்ளடங்கும். இந்த ஒப்பந்தின் கீழ், முதல் மெட்ரோ இரயில் 2027 ஆம் ஆண்டு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். அதைத் தொடர்ந்து 14 மாதங்களுக்கு கடுமையான பாதைகள் மற்றும் ஓட்டுநர் இல்லாத இரயில் இயக்கத்திற்கான சோதனைகள் நடத்தப்படும்.*

*இதில் பிற அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு சோதனை மற்றும் சேவை சோதனைகள் அடங்கும். அதன்பின் மீதமுள்ள அனைத்து மெட்ரோ இரயில்களும் செப்டம்பர் 2027 முதல் மே 2028 வரை ஒவ்வொரு கட்டமாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். Alstom Transport India நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தம், இரண்டாம் கட்ட திட்டத்திற்கான ஓட்டுநர் இல்லாமல் இயக்கப்படும் மெட்ரோ இரயில்களை கொள்முதல் செய்வதற்கான மூன்றாவது மற்றும் இறுதி ஒப்பந்தமாகும். முதல் இரண்டு ஒப்பந்தங்கள் முன்பே வழங்கப்பட்டுள்ளது.*

---

### உலக சுற்றுச்சூழல் தினம் :

# இயற்கையைப் பாதுகாக்க உறுதியேற்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன். 6-**

**உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நம்மை வாழ வைக்கும் இயற்கையைப் பாதுகாக்க உறுதியேற்றிடுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.**

உலக சுற்றுச்சூழல் நாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நம் சொகுசுக்காக இயற்கையை மாசுபடுத்தாமல், நம்மை வாழவைக்கும் இயற்கையைப் பாதுகாக்க உறுதியேற்றிடுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.